**செ. கு. எண்**:130 **நாள்**:04.04.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.4.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சோமரசம்பேட்டை, பிராட்டியூர் மேற்கு கிராமத்தில் 1.4.2012 அன்று, திருச்சிராப்பள்ளி - திண்டுக்கல் பிரதான சாலையைக் கடந்து சென்ற கொத்தமங்கலம் குடித் தெருவைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மகன் நடராஜன் மீது திருச்சிராப்பள்ளியிலிருந்து திண்டுக்கல் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த நடராஜன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. நடராஜனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**